අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව<br>எனது இல.<br>My Ref. | ED/01/24/01/101/පොදු/Vol ii | ඔබේ යොමුව<br>உமது இல.<br>Your Ref. | | 2026.04<br>திகதி<br>Date | |

அனைத்துப் பிரிவெனாதிபதிகள்,

அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள்,

அனைத்து அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முகமையாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு,

**<u>"சுரகிமு லங்கா" (இலங்கையை காப்போம்) பாடசாலை சக்திப் பாதுகாப்புத் திட்டம்</u>**

**தொனிப்பொருள் - "ஒன்றுபடுவோம் - ஒளியயேற்றுவோம்"**

எல்-நினோ காலங்களில் இலங்கையின் காலநிலை கணிசமாக மாற்றமடைவதுடன், அதன் பிரதான தாக்கமாக பகல் நேர வெப்பநிலை அதிகரிப்பதைக் குறிப்பிடலாம். இதன் மூலம் மாணவர்கள் மற்றும் மக்களிடையே வெப்ப வாதம் (Heat stroke) மற்றும் நீரிழப்பு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது. அதேசமயம் மழைவீழ்ச்சி கணிசமாகக் குறைந்து நீண்ட காலம் வறண்ட நிலை காணப்படுவதால் நீர் மூலங்கள் வேகமாக வற்றுகின்றன. இது நீர் வழங்கலுக்கும் விவசாயத்திற்கும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மேலும், நீர் மட்டம் குறைவடைவதால் நீர்மின் உற்பத்தி குறைந்து சக்தி வழங்கலிலும் நெருக்கடிகள் ஏற்படக்கூடும் என்பதுடன், இது மின்சாரத் தட்டுப்பாட்டிற்கும் காரணமாக அமையலாம்.

2 எனவே, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எல்-நினோ நிலைமை மற்றும் உலகளாவிய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் வலுச்சக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக பாடசாலை மாணவர்களைத் தெளிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கமைய இலங்கையின் பாடசாலை அமைப்பினுள் சக்திப் பயன்பாட்டை வினைத்திறனாக்கி, சக்திப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு 'சுரகிமு லங்கா (இலங்கயை காப்போம்) பாடசாலை சக்திப் பாதுகாப்புத் திட்டம்' அறிமுகப்படுத்தப்படுகிறது.

3, வாழ்வின் இருப்பை நிலைபேறானதாக்குவதற்கு மாணவர்களிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி, மாணவர்கள் ஊடாக இச் செய்தியைப் பெற்றோரிடம் கொண்டு சென்று நிலைபேற்றுத்தன்மைக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க சமூகத்தைத் தூண்டுவதும், பாடசாலைகளுக்குள் சக்திப் பாதுகாப்பு கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதையும் நோக்கமாகக் கொண்டு, பின்வருமாறு செயற்படுமாறு அனைத்து அதிபர்கள் மற்றும் பாடசாலைத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் நோக்கில் இக்கடிதம் வெளியிடப்படுகிறது.

teachmore.lk

4 முதலாம் தவணை முடிவில் பாடசாலை விடுமுறை வழங்குவதற்கு முன்னதாக, 2026 **ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி** பின்வரும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், அந்தத் திகதி நடைமுறையில் கடினமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்குப் பொருத்தமான ஒரு நாளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

| நேரம் | செயற்பாடு | விபரம் |
|---|---|---|
| காலைக் கூட்டம் | எல்-நினோ நிலைமை மற்றும் உலகளாவிய எரிபொருள் நெருக்கடி தொடர்பாக மாணவர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டமொன்றை நடாத்துதல் (காலைக்கூட்டத்தின் போது ஆசிரியர்கள் / பொருத்தமான வளவாளர் மூலம் தெளிவுபடுத்துதலை மேற்கொள்வது பொருத்தமானதாகும்.) | **<u>சக்திப் பாதுகாப்பிற்காகத் தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள்</u>**<br>• மின்சாரம் மற்றும் நீர்த் தடங்கல்களுக்காக முன்கூட்டியே தயாராக இருத்தல்.<br>• பயன்படுத்தாத சந்தர்ப்பங்களில் மின்விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் உபகரணங்களை அணைத்து வைத்தல் (குறிப்பாக இரவு 7 மணி முதல் 10 மணி வரை முடிந்தவரை மின்சாரப் பயன்பாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் (உச்சத் தேவையை - Peak demand குறைப்பதற்காக), இரவு 7 மணிக்கு வீட்டில் தேவையற்ற ஒரு மின்விளக்கையாவது அணைத்தல் மற்றும் இரவு 7 மணி முதல் 10 மணி வரை வீட்டின் குளிர்சாதனப் பெட்டியின் மின் இணைப்பைத் துண்டித்து வைப்பது பொருத்தமானதாகும்).<br>• பயன்படுத்தப்படாத மின் உபகரணங்களை மின் செருகிகளிலிருந்து (Plugs) அகற்றுதல்.<br>• ஆசிரியர்கள்/ பெற்றோரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்குப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதல்.<br>• சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு காலப்பகுதியில் வீட்டில் நீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.<br>**<u>அதிக வெப்பமான காலநிலைத் தன்மையிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்காகத் தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள்</u>**<br>• அடிக்கடி நீர் அருந்துவதற்குப் பிள்ளைகளை ஊக்குவித்தல். |

teachmore.lk

| | | |
|---|---|---|
| | | • குடிநீரைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.<br>• அதிக சூரிய வெளிச்சத்திற்கு (குறிப்பாக மு.ப. 11.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில்) வெளிச்செல்வதை தவிர்த்தல்.<br>• முடிந்தவரை இயற்கை ஒளியை (சூரிய ஒளி) பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.<br>• வெப்ப வாதம் (Heat stress) அறிகுறிகளை (தலைவலி, நடுக்கம்/ அதிர்ச்சி, வியர்வை) கண்டறிவதற்குத் தெளிவுபடுத்துதல்.<br>• நோய் அறிகுறிகள் அவதானிக்கப்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.<br>• ஆசிரியர்கள்/பெற்றோரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்குப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதல். |
| காலைக் கூட்டம் | 60 செக்கன் கருத்து (60 second ideas) | சக்திப பாதுகாப்பு மற்றும் எல்-நினோ (El-Nino) நிலைமையிலிருந்து பாதுகாத்தல் தொடர்பாக 60 வினாடிகளுக்கும் குறைவான குறுகிய கருத்துக்களை/ செய்திகளை காலை ஆராதனைக் கூட்டத்தின் போது முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு இடமளித்தல். இந்தச் செய்திகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் முன்வைப்பதற்கு ஊக்குவித்தல். |
| முதலாம் பாடவேளை | ஆக்கபூர்வமான செயற்பாடுகளை (ஓவியங்கள், கட்டுரைகள், சுவரொட்டிகள், நாடகங்கள், விட்டிற்கு ஒரு செய்தியாகக் கடிதங்கள்) முன்னெடுத்தல் மற்றும் சக்திப் பாதுகாப்பு வேலியை (Energy Saving Fence) ஆரம்பித்தல். | <u>**ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல்**</u><br>எல்-நினோ நிலைமை மற்றும் உலகளாவிய எரிபொருள் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்வதற்காக மாணவர்கள் என்ற ரீதியில் அவர்களால் செய்யக்கூடியவை குறித்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளைச் செய்வதற்கு வாய்ப்பளித்தல். மாணவர்கள் செய்த ஆக்கபூர்வமான படைப்புகளைப் காட்சிப்படுத்துவதற்கு, பாடசாலையில் மாணவர்கள் அடிக்கடி நடமாடும் ஓரிடத்தில் |

teachmore.lk

| | | |
|---|---|---|
| | | 'சக்திப் பாதுகாப்பு வேலி' (Energy Saving Fence) எனும் பெயரில் ஒரு காட்சிப் பலகையை ஆரம்பித்து, பிள்ளைகளின் படைப்புகளைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்தல். (இதனை பாடசாலையின் சக்திச் சங்கம் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான சங்கத்திடம் ஒப்படைத்து, தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதற்கும் (Update) நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.)<br>**வீட்டிற்கு ஒரு செய்தி**<br>சக்தியைச் சேமிப்பதன் முக்கியத்துவம் குறித்து "வீட்டிற்கு ஒரு செய்தி" எனும் தலைப்பில் மாணவர்களையே ஒரு கடிதம் எழுதச் செய்து, அவற்றுள் சிறந்த செய்தியைத் தேர்ந்தெடுத்து, அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதத்தை ஒவ்வொரு மாணவரினதும் வீட்டிற்கு அனுப்பி, அக் கடிதம் கிடைத்தமைக்காகத் தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பத்தைப் பெற்று வருவதற்கு வழிப்படுத்துதல். (அங்கு, இந்தத் தேசியப் பணியைப் பற்றி வீட்டிற்கு அந்தச் செய்தியைக் கொண்டு செல்லும் மாணவர், சக்திப் பாதுகாப்புத் திட்டத்தின் பாடசாலை மட்டத்திலான ஒரு பிரதிநிதியாக (Agent) செயற்படுகிறார் என்பதை விளக்குதல் வேண்டும்.)<br><br>**தனிநபர் அல்லது குழுத் திட்டங்கள்**<br>பாடசாலையில் அல்லது வீட்டில் சக்திப் பாதுகாப்பிற்காகத் தனிநபர் அல்லது குழு ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல் மற்றும் புத்தாக்கச் சிந்தனைகள் கொண்ட திட்டங்களைத் தேர்ந்தெடுத்து, எதிர்காலத்தில் பொருத்தமான வகையில் பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்குச் சேகரித்து வைத்தல். |

teachmore.lk

| | | |
|---|---|---|
| | சக்திப் பாதுகாப்புப் பதிவுப் புத்தகம் (Log Book)/ தினக்குறிப்புப் புத்தகம் ஒன்றினை ஆரம்பித்தல். | வீட்டில் சக்தியைச் சேமிப்பதற்கு எடுத்த நடவடிக்கைகளைப் பதிவு செய்வதற்கு வழிப்படுத்துதல் மற்றும் அது குறித்துப் பாடசாலையில் மதிப்பீடு செய்வதற்காக வரும் நாட்களில் நடவடிக்கை எடுத்தல்.<br><br>(விசேட குறிப்பு: இச் செயற்பாடுகளை வகுப்பு மட்டத்தில் மாணவர்களின் வயது மற்றும் திறமைக்கு ஏற்ப ஒவ்வொன்றாகப் பொருத்தமான பணிகளாகப் பிரித்துக் கொடுத்துச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது) |

நாலக கலுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

பிரதிகள்:-

1. அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்
2. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
3. அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்
4. அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
5. அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
6. அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்

teachmore.lk